**செய்தி வெளியீட்டு எண்.203** **நாள்: 4.3.2010**

# <u>மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் பள்ளிக்கல்வித்துறையில் 174 இளநிலை உதவியாளர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்</u>

தலைமைச் செயலகத்தில் இன்று (4.3.2010) நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி IV சிறப்புத் தேர்வு மூலம் இளநிலை உதவியாளர் நேரடி நியமனத்திற்காக தேர்வு செய்யப்பட்டு, பள்ளிக்கல்வித் துறைக்கு ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ள 174 நபர்களுக்கு மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

கலைஞர் தலைமையிலான அரசு 2006ஆம் ஆண்டு பொறுப்பேற்றப்பிறகு, பள்ளிக் கல்வித்துறையில் இதுவரை 55 ஆயிரத்து 409 ஆசிரியர்களும், அலுவலகப் பணியாளர்களும் நேரடி நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மேலும் தொகுப்பூதிய அடிப்படையில் பணியாற்றி வந்த 43 ஆயிரத்து 488 ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் காலமுறை ஊதியத்தின் அடிப்படையில் முறையான நியமனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளனர்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு.தங்கம் தென்னரசு, பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் திரு.ம.குற்றாலிங்கம், பள்ளிக்கல்வி இயக்குநர் திரு.பெ.பெருமாள்சாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.